**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.84/2022**
**Prosecution Witnesses: 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : சரோஜா | Caste | : |
| Father Name/ Husband Name | : முனிஸ்வரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் எதிரிகளின் appearance dispense செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(19.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேலக்கோட்டையில் குடியிருந்து வருகிறோம். எங்களது சொந்த ஊர் வடக்கம்பட்டியாகும். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகள் 4 பேரையும் எனக்கு தெரியும். ஆனால் அவர்களின் பெயர் எனக்கு தெரியாது. எதிரிகள் மொத்தம் 5 பேர் ஆண்கள், 5 பேர் பெண்கள் ஆவார்கள். கடந்த 26.01.2019 அன்று மாலை 4 மணியளவில் வடக்கபட்டிக்கு திருவிழாவிற்கு சென்றிருந்தோம். அப்போது மேற்கண்ட தேதி நேரத்தில் எங்கள் வீட்டை டம் டம் என்று தட்டும் சத்தம் கேட்டது. அனைவரும் அப்போது தூங்கி கொண்டிருந்தோம். சத்தம் கேட்டு எனது பெரிய மகன் சுரேஷ் வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி போலிஸ் பாண்டி என்பவர் அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவர் இந்த வழக்கின் 2 வது எதிரியாவார். 2 வது எதிரி எனது மகன் சுரேஷ்– ஐ தர தரவென இழுத்துக்கொண்டு சென்றார். அப்போது எனது கணவரும் அ.சா.1ம் சத்தம் கேட்டு வந்த போது எதிரிகள் வினோத் ஜெகன், ராஜா ஆகியோர்கள் சேர்ந்து

எனது மகன் சுரேஷ்– ஐ இழுத்துக்கொண்டு கீழே போட்டு அடித்தார்கள். அதனால் சுரேஷ்க்கு முதுகு, நெஞ்சு பகுதியில காயம் ஏற்பட்டது. எனது கணவர் அ.சா.1 ஐ 2வது எதிரி போலிஸ் பாண்டி, வினோத், ஜெகன் ராஜா ஆகியோர்கள் சேர்ந்து கட்டையால் வலது தோள்பட்டையில் எனது கணவரை அடித்து அவரை கீழே தள்ளிவிட்டு அடித்தார்கள். நான் ஓடிவந்து அடிக்காதீர்கள் என விலக்கிவிட்ட போது 2 வது ( **சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளிக்கிறார்**) என்னை பார்த்து தேவிடியா அவுசாரி என சொல்லி அசிங்கமாக திட்டி என்னையும் அடித்துக் கீழே தள்ளிவிட்டார். அங்கே எங்கள் வீட்டிற்கு விருந்தாளியாக வந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். இல்லையென்றால் எதிரிகள் என்னை அடித்துக்கொன்று இருப்பார்கள். எதிரிகள் அனைவரும் எனது சம்மந்தி நாராயணுக்கு உறவினர் ஆவார்கள். அவர்கள் சொத்து சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள். சொத்து பற்றி எனக்கு தெரியாது. எங்கள் வீட்டில் எங்கள் சம்மந்தக்காரர்கள் இருந்ததால் தான் எதிரிகள் வந்து எங்களை அடித்தார்கள். என்னை வீட்டிற்குள் அழைத்து சென்றுவிட்டார்கள். அதன் பிறகு எதிரிகள் கல் மற்றும் செங்கல்லை கொண்டு எறிந்தார்கள். சம்பவம் முடிந்து எதிரிகள் அடித்ததில் எனக்கு இடது கால் வலித்துக் கொண்டே இருந்தது. நன்றாக வீங்கிவிட்டது. எனவே நான் திருமங்கலம் குரு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். எனக்கு மாவு கட்டு போட்டார்கள். எனக்கு காலில் ஸ்கேன் செய்து பார்த்தார்கள். காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாக கூறினார்கள். **மருத்துவ ஆவணங்களை குறியிடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.84/2022**
**Prosecution Witnesses: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கண்ணன்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **ராமசாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் எதிரிகளின் appearance dispense செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(19.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் வடக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறோம். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முனிஸ்வரன், அ.சா.2 சரோஜா ஆகியோர்களை எனக்கு தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 4 எதிரிகளும் எங்கள் ஊர்க்காரரர் ஆவார்கள். பட்டியல் சாட்சி – 8 கண்ணன் த/பெ.நாராயணசாமி என்பவர் 05.11.2025 அன்று இறந்துவிட்டார். கடந்த 26.01.2019 அன்று மாலை 4 மணியளவில் எங்கள் வடக்கம்பட்டியில் திருவிழா நடைபெற்றது. அப்போது 4 மணியளவில் எங்கள் வீட்டு அருகே சத்தம் கேட்டது. கூட்டமாக இருந்தது. சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சண்டையை விலக்கிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது இவ்வழக்கில் அ.சா.1 முனிஸ்வரன் சம்மந்தியான சாட்சி நாராயணன் என்பவருக்கும் அவரின் உடன்பிறந்த சகோதரிகளான எதிரிகள் குடும்பத்திற்கும் சொத்து பிரச்சினை இருந்து வந்தது என்றும் இதை மனதில் வைத்து 26.01.2019 அன்று மாலை 4 மணியளவில் எதிரிகள் அனைவரும் அ.சா.1 ன் வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக பேசி உன்னுடைய சப்போட்டில் தான் நாராயணன் எங்களிடம் சொத்து கேட்கிறான் என எதிரிகள் அனைவரும் அசிங்கமாக பேசி 1 முதல் 3 வரையுள்ள எதிரிகள் கட்டையால் அ.சா.1 ன் வலது கை தோள்பட்டையில் அடித்துக் காயத்தையும் இடது முழங்காலில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்தி அ.சா.2 சரோஜா என்பவரையும் இடது காலில் அடித்துக் காயத்தை ஏற்படுத்தியும், தினேஷ் என்பவரையும் அடித்துக் காயத்தை ஏற்படுத்தியும்,நாராயணன் என்பவரையும் அடித்துக் காயத்தை ஏற்படுத்தியும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை.